**கல்குடா கல்வி வலய, பாடசாலைகளின் சுய கற்றல் செயற்பாட்டு பரீட்சைக் குழு**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை-புதிய பாடத்திட்டம் 2020**

தமிழ் 11 (மாதிரி வினாத்தாள்:01)

# Tamil II

**72** **T** **II**

**மூன்று மணித்தியாலம்**
**மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்**

➢ வினாப்பத்திரத்தை வாசித்து,வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமைவழங்கும் விளாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

பகுதி I இல் உள்ள **மூன்று** வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**01. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
**மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1.01. பின்வருவனவற்றுள் 'உ'கரம் இதழ் குவிந்து உச்சரிக்கப்படும் சொல்
(1) புயல் (2) அது (3) எழுது (4) படு (5) கடுகு
(.......)

1.02. கூட்டுயிராக வரும் எழுத்துக்கள்
(1) அ, இ (2) ஊ, ஓ (3) ஐ, இ (4) ஐ, ஔ (5) ஔ, ஊ
(.........)

1.03. அங்காத்தல் மூலம் பிறக்கும் எழுத்து
(1) அ, ஆ (2) அ, ஔ (3) இ, ஈ (4) உ, ஊ (5) எ, ஏ
(.........)

1.04. உதட்டுப்பல் ஒலியாக அமைவது
(1) வ் (2) ட் (3) ண் (4) ழ் (5) ள்
(.........)

1.05. 'எகர' உயிர் வேறுபட்டு ஒலிப்பது
(1) எட்டு (2) எளிமை (3) எறும்பு (4) எருது (5) எள்ளு
(........)

1.06. பின்வருவனவற்றுள் பகரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
1. பட்டு 2. ஆம்பல் 3. பந்து 4. பன்றி 5. அப்பம்
(.........)

1.07. ங், ஞ், ந், ம் ஆகிய ஒலிகளைக் குறிக்கும் பொருத்தமான ஒலிவகை
1. ஆடொலி 2. மருங்கொலி 3. மூக்கொலி 4. வெடிப்பொலி 5. உரசொலி
(.........)

1.08. பின்வருவனவற்றுள் மூன்று மெய்கள் அடுத்து மயங்கும் சொல்
1. மயக்கம் 2. அண்ணல் 3. பற்று 4. வாழ்த்து 5. வெட்கம்
(.........)

1.09. பின்வருவனவற்றுள் உடன்நிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்றுள்ள சொல்
1. காக்கை 2. வாழ்க்கை 3. சேர்க்கை 4. படர்க்கை 5. வருகை
(.......)

1.10. 'க'கரம் வேற்றுநிலை மெய்ம்மயங்கில் வந்துள்ள சொல்
1. வெட்கம் 2. பக்கம் 3. அங்கம் 4. பற்கள் 5. பக்தி
(.......)

1.11. மொழியிறுதியில் மட்டும் வினாப்பொருள் உணர்த்திவரும் எழுத்து.
1. எ, யா 2. ஏ, யா 3. ஏ, ஓ 4. ஆ, ஓ 5. ஆ, ஏ
(.......)

1.12. 'இ'கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்.
1. திசை 2. இரை 3. இடுப்பு 4. நிலம் 5. இவர்
(.......)

1.13. 'உ'கரம் இதழ் குவியாது ஒலிக்கும் சொல்.
1. முயல் 2. கொக்கு 3. உமி 4. புல் 5. துடை
(.......)

1.14. மென்றொடர்க் குற்றியலுகரமாக அமைவது.
1. மனசு 2. வயது 3. கொக்கு 4. மாடு 5. வண்டு
(.......)

1.15. மகரக்குறுக்கமாக அமைந்து வருவது.
1. பல்துறை 2. வரும் வண்டி 3. வைகை 4. சௌபாக்கியம் 5. ஐந்து
(.......)



kalvi.lk

1.16. பின்வருவனவற்றுள் வினாச்சொல்லை மட்டும் குறிப்பிடுக.
1. யானை 2. எமை 3. யாகம் 4. யாங்கு 5. யாழ்

(…….)

1.17. பெய்து, மார்பு என்பன எவ்வகையான குற்றியலுகரங்கள்.
1. வன்றொடர் குற்றியலுகரம் 2. மென்றொடர் குற்றியலுகரம்
3. இடைத்தொடர் குற்றியலுகரம் 4. நெடிற்தொடர் குற்றியலுகரம்
5. ஆய்தத் தொடர் குற்றியலுகரம்

(…….)

1.18. பின்வரும் செய்தித் தலைப்புகளில் **பொருள் மயக்கமற்ற** தலைப்பு,
1. குண்டர்கள் குத்திக் கொலை 2. ஆசிரியரின் வீடுடைப்பு
3. சேயா கொலை வழக்கு 4. ஆசிரியர் அடித்து வெளியேற்றம்
5. முல்லைத்தீவில் முக்கிய நபர் கைது.

(…….)

1.19.பின்வருவனவற்றுள் அகராதி ஒழுங்கில் **அமையாத** சொற்றொகுதி,
1. கவிதை,காய்ச்சல்,கிணறு,குடை, கூடை
2. பிரதமர்,மைதானம்,சொத்து,மேசை,நகம்
3. சண்டை,சிரிப்பு,சீற்றம்,செயற்கை,சோர்வு
4. வசந்தம்,வானொலி,வியப்பு,வீடு,வெண்கட்டி
5. நண்டு,நாகம்,நிலம்,நீலம்,நூலகம்

(…….)

1.20. பின்வருவனவற்றுள் பொருதததமான இணைப்பு : இங்குள்ள பூஞ்செடிகளிலுள்ள பூக்களைப் பிடுங்குவதோ,
1. கிளைகளை ஒடிப்பதோ தண்டனைக்குரிய குற்றம்.
2. கிளைகளை ஒடிப்பதோ தண்டனைக்குரிய குற்றங்கள்.
3. அல்லது கிளைகளை ஒடிப்பதோ தண்டனைக்குரிய குற்றம்.
4. அத்துடன் கிளைகளை ஒடிப்பதோ தண்டனைக்குரிய குற்றங்கள்.
5. அத்துடன் கிளைகளை ஒடிப்பதோ தண்டனைக்குரிய குற்றம்.

(…….)

(20 புள்ளிகள்)

**02.(அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.**

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த உரைநடை ஆசிரியர்களுள் சிவஞான சுவாமிகள் ஒப்புயர்வற்று விளங்கியது போலவே, பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலர் சிறப்புற்றுவிளங்கினார். தமிழ்மொழி வளர்ச்சிக்கு உரைநடை விருத்தி அவசியமென்று வற்புறுத்தியவர்களுள் ஆறுமுகநாவலரும் ஒருவர். கிறிஸ்தவமதப் பிரசாரத்தினால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசமயத்திற்கு உண்டான தளர்ச்சியை நீக்கிய நாவலர் பெருந்தகை, தமிழ்மொழியை வளர்ப்பதற்கு பல முயற்சிகளைச் செய்துள்ளார். சென்னையிலே அச்சியந்திரசாலை ஒன்றை அமைத்து பல தமிழ் நூல்களை திருத்திய முறையில் பிழையறப் பதிப்பித்துதவினார். எடுத்துக் கொண்ட காரியம் எதனையும் சோர்வின்றி திருத்தமாக செய்யும் இயல்பினர். நாவலர் என்பதற்கு வழுக்கள் யாதுமின்றி அவர் அச்சிட்ட நூல்களே சான்றாகும்.செய்யுள் இலக்கியங்கள் வேண்டிய அளவு தமிழில் இருப்பதால் அவற்றை இயற்றுவதிலும் உரைநடை நூல்களை இயற்றுவதே தமிழ் மொழியை வளர்ப்பதற்கு சிறந்த வழி என்று கொண்டு பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றை உரைநடையில் எழுதி உதவியதோடு அவர் பல கட்டுரைகளையும் கண்டன நூல்களையும் மாணவர் கற்பதற்கு வேண்டிய உரைநடைநூல் பலவற்றையும் எழுதியுள்ளார். நாவலரது உரைநடை, பழமையையும் புதுமையையும் ஒழுங்கு தழுவிய முற்போக்குமுடைய ஒரு சிறந்த நடையாகும். பழைய இலக்கண முறைகளை அனுசரித்து உரையாசிரியர்கள் எழுதிய நடையைப் போன்ற ஒரு கம்பீரமான நடையில் எழுதக்கூடிய ஆற்றல் உடையவராய் இருந்த போதும் தமிழறிவில் குறைந்தோரும் எளிதில் பொருள் காணக்கூடியவகையில் காலத்திற்கேற்றவாறு வழக்கிலுள்ள வழுவற்ற சொற்களையும் பிரயோகித்துச் சிறந்த நூல்களை எழுதினார். அதனால் அவர் வசனநடை கைவந்த வல்லாளர் எனப் பாராட்டப்பட்டார்.

**(13 புள்ளிகள்)**



kalvi.lk

**(ஆ) பகுதியிலுள்ள உரைப் பகுதியைப் படித்து அதன்கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

“நம்ப நட,நம்பி நடவாதே” என்று கூறுவார்கள். எனினும் நம்மிடையே நம்பி நம்பிக் கெட்டவர்களே அதிகமாக உள்ளார்கள். இவர்கள் செய்த தப்பு ஆழமாக சிந்தித்து செயற்படாமையே. இவர்கள் இழப்பைச் சந்தித்த பின்பே விழிப்படைகின்றார்கள். பெரிய இழப்பின் மூலம் ஒரு பாடம் கற்கவேண்டியதில்லை. “மற்றவர்களுக்கு ஏற்படும் நன்மை தீமைகளை ஆராந்து ஏன் நடைபெறுகின்றது?, எப்படி நடை பெறுகின்றது? அதன் விளைவு என்ன? அதை எப்படித்தவிர்க்கலாம்?” என்று சிந்தித்தால், நாம் அத்தகைய இழப்பை நம் வாழ்வில் தவிர்க்கலாம். ஒரு சாதாரண அறிவுள்ள மனிதர் இதைத்தான் செய்வர்.

நம்மில் பலரும் ஒரு செயலைச் செய்யும்போது அதனை உணர்வு பூர்வமாக எடுத்துக்கொள்கின்றோமே தவிர அறிவுபூர்வமாக எடுப்பதில்லை. இழப்பு ஏற்பட்டால் மட்டும் இது எமது தலைவிதி எனக்கூறிவிடுகிறேமே தவிர நமது தவறை அறிய முற்படுவதில்லை. இதனால் மீண்டும் அத்தவறையே செய்கின்றோம். இந்த நிலைமை நம் சமுதாயத்தில் மாறவேண்டும். மேலும் நாம் சிந்திக்காமல் செயற்பட்டதால் பொருள் இழப்போடு நம் உறவையும் இழக்க நேரிடுகின்றது.

‘நம்பிக்கைத்துரோகம்’ நம் ஈழத்தில் மிகச்சாதாரணம். சொந்தங்கள்,ஆசிரியர்கள், நண்பர்கள்,காதலர்கள் என பலரையும் நம்புகின்றோம். உதாரணமாக அவர்கள் பண உதவிகள் கேட்கும்போது நம்பிக்கொடுக்கின்றோம்.ஆனால் பணத்தை வாங்குபவர்கள் ஏமாற்றும் நோக்குடனேயே நம்மை அணுகுவார்கள். ஏமாறியவர்கள் பலர் தம் சோகக்கதையைக் கூறி தம் பிரச்சினையைத் தீர்க்க ஏதும் வழிகள் உண்டா என கேட்ப்பார்கள். சில சந்தர்ப்பத்தில் ஓரளவு தீர்க்கலாம். ஆனால் அநேகமானவைக்கு தீர்வில்லை. பலருக்கு உணர்புபூர்வமாக செயற்படாமல் அறிவுப்பூர்வமாகச் செயற்படும்படி கூறலாம்.

அவர்கள் தம் மனைவி,கணவன்,காதலர்,சகோதரங்கள்,நண்பர்கள்,ஆசிரியர்கள் ஆகியோரிடத்து நம்பிக்கை, நேர்மை, நற்குணம், உள்ளவர்கள். அதனால் அவர்களை நம்பலாம் என்று கூறி நம் புத்திமதியை ஏற்க மாட்டார்கள். ஏமாந்தபின்தான் உணர்வார்கள். ஏமாறு முன் ‘நம்பிக்கைத்துரோகம்’ மற்றவர்களுக்குத்தான் என்பார்கள். பின் தமக்கு ஏற்பட்ட பின் வருந்துவார்கள்.

ஒவ்வொரு குடும்பத்திலும் பெரிய அளவிலோ,சிறிய அளவிலோ நம்பிக்கைத்துரோகம் நடைபெறுகின்றது. இதற்கு, தாம் பலியான பின்பே இதை உணர்கின்றார்கள்.இது கவலைக்குரியது. ஈழ மக்கள் சரித்திரத்தில் எப்பொழும் இல்லாத துன்பத்தை அண்மையில் அனுபவித்தும் அவர்கள் ‘துரோகம் செய்யும் கலாசராத்தை’ கைவிடவில்லை. அதை விட்டால் தான் ஈழம் முன்னேறும்.இனிமேலாவது தமது தீர்மானங்களை உணர்ச்சி பூர்வமாக எடுக்காமல் அறிவு பூர்வமாக எடுத்து எதிர்காலத்தில் சகல ஐஸ்வரியத்துடன் வாழவேண்டும்.

(i) ஒரு இழப்பைத் தவிர்த்துக்கொள்ள ஆசிரியர் கூறும் உபாயங்கள் எவை?
(ii) நமது செயல்கள் எப்போது எப்படி அமைய வேண்டும் என ஆசிரியர் விரும்புகிறார்?
(iii) இழப்பைச் சந்தித்த பின்பே பலரும் விழிப்படைவதற்குக் காரணமாக ஆசிரியர் குறிப்பிடுவன யாவை?
(iv) ‘நம்பிக்கைத்துரோகம்’ செய்பவர்களாக ஆசிரியர் யாவரைக் குறிப்பிடுகிறார்?
(v) ஆரிரியரின் பெருவிப்புக்களாக வெளிப்படுவன யாவை?

**(12 புள்ளிகள்)**
**(25 புள்ளிகள்)**

**03. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.**

(அ) இயற்கை அனர்த்தங்களும் பாதுகாப்பும்.

(ஆ) தற்கால உணவுப் பழக்கமும் சவால்களும்

(இ) மாணவர்,கைத்தொலைபேசிப் பாவனை:சவால்களும் தீர்வுகளும்.

(ஈ) கடனுதவித்திட்டங்களும் மக்கள் வாழ்வும்

(உ) “உலகத்தோடு ஒட்டி வாழ்”

(25 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

**04.**(அ) சங்ககாலத்தில் எழுந்த ஆற்றுப்படை நூல்களைக் குறிப்பிட்டு, ஆற்றுப்படை இலக்கிய மரபுகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) சங்க இலக்கியங்களில் பயின்றுவந்த உள்ளுறை உவமை,இறைச்சி அணிகளை சங்க இலக்கியச்சான்று தந்து விளக்குக.

(இ) புறத்திணையின் முதன்மை அம்சங்களைக் குறிப்பிடுக.

**(15 புள்ளிகள்)**

**05.**(அ) சோழப் பெருமன்னர் காலத்து காவியங்களை வகைப்படுத்திக்காட்டுக.

(ஆ) அக்காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்களை வகைப்படுதிக் குறிபிடுக.

(இ) இக்கால இலக்கியங்களின் பண்புகளைக்குறிப்பிட்டு விளக்குக.

**(15 புள்ளிகள்)**

**06.**(அ) யாழ்ப்பாண அரசர் காலத்து இலக்கியங்களை பொருள் அடிப்படையில் வகைப்படுத்திக்காட்டுக.

(ஆ) ஆரியச்சக்கரவர்த்திகள் கால இலக்கியங்களில் பயின்று வந்த செய்யுள் மரபுகளை எடுத்துக்காட்டுக.

(இ) ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியங்களில் தமிழ்நாட்டு இலக்கியப் பாரம்பரியம் ஏற்படுத்திய செல்வாக்குகளை எடுத்துக்காட்டுக.

**(15 புள்ளிகள்)**

07.பின்வருவோரில் யாரேனும் **இருவர்** தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.

(அ) வித்துவ சிரோமணி சி.கணேசையர்

(ஆ) நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்

(இ) சாமுவேல் ஃபிஸ்க் கிறீன்

(ஈ) அருள்வாக்கி அப்துல் காதர் புலவர்

**(15 புள்ளிகள்)**

**08.**(அ) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**(i) பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு திருத்தி எழுதுக.**

- நோயாளிகள் வந்த வாகனத்தை மறித்தனர்.

**(ii) பின்வரும் வாக்கியத்தில் உள்ள வழுவைச் சுட்டிக்காட்டி, வழுவற்ற முறையில் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.**

- தயாரிக்கப்பட்ட முடிச்சாயக் கலவையை குச்சியினாலோ அல்லது பல் துலக்கும் பழைய துரிகையினாலோ தலை முடியில் நன்கு தடவவும்.

**(iii) பின்வரும் வாக்கியங்களை பொருத்தமான வினையடைத்தொடர்களை இணைத்து ஒரே வாக்கியமாக எழுதுக.**

- அம்மா சுவையாகச் சமைத்தார்.
- அம்மா வாசனையாகச்சமைத்தார்.

**(iv) பின்வரும் செயப்பாட்டுவினை வாங்கியத்தை செய்வினை வொக்கியமாக மாற்றி எழுதுக.**

- ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நேரத்தில் மதுபோதையில் சுற்றித்திரிந்த இளைஞர்கள் மூவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

**(v) பின்வரும் வாக்கியங்களில் இருக்கும் எழுத்துப்பிழைகளை நீக்கி மீண்டும் எழுதுக.**

- பண்டைக்காலத்தில் சங்குவழையல்கள் அணிவது பெருவளக்காயிருந்தது.
- கவிஞர் கண்ணதாசன் பற்றிய நினைவு கூறுதல் நிகழ்வு இடம்பெற்றது.

**(10 புள்ளிகள்)**

(ஆ) பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடை தருக.

(i) வினா எழுத்துக்கள்

(ii) உயிர்த் தொடர் நெடிற்றொடர் குற்றியலுகரங்கள்.

(iii) கிரந்த எழுத்துக்கள்

**(05 புள்ளிகள்)**

**(15 புள்ளிகள்)**



kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page